**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.2272/ஆ5/2025, நாள். 11.06.2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – உறுதிமொழி – 12.06.2025 அன்று அனுசரிக்கப்படவுள்ள உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தன்று – உறுதிமொழி மேற்கொள்ள கோருதல் – தொடர்பாக

பார்வை
1. அரசாணை (பல்வகை) எண். 9, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (யு1) துறை நாள். 01.02.2005
2. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க.எண்.அ4/e.1321001/2023, நாள். 19.05.2025
3. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் கடித ந.க.எண்.029778/இ/இ1/2025, நாள். 21.05.2025

.....

பார்வை 2 மற்றும் 3–ல் காணும் கடிதங்களுக்கிணங்க, 12.06.2025 அன்று "உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம்" அனுசரிக்கப்படுவதையொட்டி அனைத்து பள்ளிகள் மற்றும் அலுவலகங்களில் உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழியினை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் 12.06.2025 அன்று (வியாழக்கிழமை) காலை 11.00 மணிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உறுதிமொழியினை எடுத்து அதன் புகைப்படத்தினை b5secceovellore@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு சார்ந்த அலுவலர்கள் மற்றும் அனைத்து வகை தொடக்க / நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – உறுதிமொழி

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் கல்வி மாவட்டம்
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து வகை தொடக்க / நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகள்
   மற்றும் மெட்ரிக் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.

நகல்–

1. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

# குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஒருபோதும் எந்தவித பணிகளிலும் ஈடுபடுத்த மாட்டேன் எனவும், அவர்கள் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிப்பேன் எனவும், குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும் தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு என்னால் இயன்றவரை பாடுபாடுவேன் எனவும் உளமார உறுதி கூறுகிறேன்.